15th December 1959]

THE HON. SRI P. KAKKAN : கேரள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது மாதிரியே ஆந்திர அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி இதில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்துக் கொண்டிருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : ஆந்திர சர்க்கார் முன்னாலேயே இதைப்பற்றி அறிக்கை சமர்ப்பித்து விட்டதாகத் தெரிகிறது. அப்படியானால் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : சீக்கிரமாகவே இது பற்றிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். இதைத்தவிர விசேஷ காரணங்கள் ஒன்றும் இல்லை.

SRI M KALYANASUNDARAM : நம்முடைய சீப்-இன்ஜினியர் அவர்களுடைய ரிபபோர்ட்டுக்கும், ஆந்திர தேசத்து சீப்-இன்ஜினியர் அவர்களுடைய ரிப்போர்ட்டுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? அவ்விதமென்றால் அது என்ன வித்தியாசம்?

THE HON. SRI P. KAKKAN : வித்தியாசம் இருக்கிறது, அதை இப்போது சொல்வதற்கில்லை.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : தலைவர் அவர்களே, நாகார்ஜுன சாகர் அணைக்கட்டு தேக்க அளவுக்கு கிருஷ்ணாவிலுள்ள தண்ணீர் வர முடியாது என்று தெரிகிறது. ஆகவே கோதாவரியிலுள்ள தண்ணீரை அதற்கு உபயோகப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் இருந்து வருவதாக தெரிகிறது. இது நமது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI N. K. PALANISAMI : ஆந்திர ராஜ்யத்திலுள்ள நதிகளிலும் கேரள ராஜ்யத்திலுள்ள நதிகளிலும் எந்த எந்த நதிகளிலிருந்து உபரி நீர் நமக்குக் கிடைக்கக்கூடும் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த விவரம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : இதற்கும் தனிக்கேள்வி போட வேண்டும்.

MR. SPEAKER : Questions are over.

[Note.—An asterisk(*) at the commencemnet of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT.

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : The following reply to the Motion of Thanks passed by the Assembly has been received from the Governor :— 10 00 a.m.

'I have received with great satisfaction your Resolution of Thanks for the Address with which I opened the present session of the Legislature 5.